முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1342

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.06.2023, வெள்ளிக்கிழமை

1. வரம்தரும் ஞான வள்ளலே
   வையகம் காத்திடும் குரு அருளாக
   அறம்பல செய்துகொண்டு உலகோர்க்கு
   அண்ணலாக அனுதினம் காட்சி தருகின்ற
2. தருகின்ற ஆறுமுக அரங்கனே
   தர்மனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   பெருமைபட ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் வைகாசி மாதம் 19 ம் நாள், 02.06.2023, வெள்ளிக்கிழமை)
   புகலுவேன் அரங்கன் சக்தி பெருகவே
3. பெருகவே உலகமெல்லாம் அரங்கன் தர்மம்
   பேராற்றலாக மாற்றம் கொள்ள
   வருங்காலம் அரங்கனின் சீடர்கள் வழி
   வையகத்தில் மாற்றம் நிகழக்கூடும்
4. தருகின்ற குணம்படைத்த மக்களாக
   தயவான சக்திகளாக உலகோரெல்லாம்
   வருங்காலம் மாற்றம் கண்டு இனிதே
   வையகத்தில் எங்கும் பகை வஞ்சம் சூழ்ச்சி களவு இல்லாத வண்ணம்
5. வண்ணமுடன் நல்மாற்றம் தெளிவு கூடி
   வையகத்தில் பொருள் பற்றும் அகன்றோடி
   ஐயன் என் வழிபாடே சிறந்ததென
   அரங்கன் தர்மமே உயர்ந்ததென
6. என அனைவரும் பின்பற்றி
   எங்கும் சன்மார்க்கம் தழைத்து
   ஞான உலகமாக மாற்றம் பெறும்
   ஞானிகளாக மக்களுக்கு ஆகுகின்ற தகுதி கூடி
7. கூடியே உலகோரெல்லாம் அரங்கன் வழி
   குறையிலா உயர்வு கண்டு சிறக்க நேரும்
   திருவருளை குரு அருள் கொண்டு காட்டும்
   தெய்வசக்தியாக அரங்கன் கலியில் இருக்க

8. இருக்கவே அரங்கன் தொடர்பு கொண்டு
இணைந்து ஓங்காரக்குடில் தன்னில்
கருத்தாக தர்மம் செய்பவரெல்லாம்
கலியுகத்தில் தேறுவரப்பா இது ஆறுமுகன் சத்தியவாக்கு
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—